# மே 2016 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு

பொதுவாக விவசாய பயிர்களில் பூச்சி மற்றும் நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு குறைவாகவே காணப்படுகின்றன. ஆதலால், விவசாயிகள் தங்கள் பயிர்களில் விளக்குப் பொறி அமைத்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், சொர்ணவாரி மற்றும் கார் முன்பருவ நெல் பயிரிடும் விவசாயிகள் கவனத்திற்கு:

**நாற்றாங்கால் மற்றும் நடவு செய்த வயல்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள்.**

இலைப்பேன், இலைச்சுருட்டுப்புழு, நெல் கூட்டுப்புழு மற்றும் தத்துப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நோயினைப் பொறுத்தவரை இலைப்புள்ளி நோய் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றினைக் கட்டுப்படுத்த

அ) ஈர விதை நேர்த்தி:

1. ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டசிம் அல்லது சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் 10 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்கவும்.
2. நெல் நாற்றங்காலைப் பிடுங்குவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு 20 சென்ட் நாற்றாங்காலுக்கு 1.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸ் மற்றும் 30 கிலோ தொழு உரம் இடவும்.

**3. நெல் நாற்றுக்கள் வேர் நனைத்தல்**

நெல் வயலின் ஒரு ஓரமாக 25 சதுர மீட்டர் அளவு தேர்ந்தெடுத்து அதில் 2.5 செ.மீ தண்ணீர் தேக்கி 2.5 கிலோ சூடோமோனாஸ் ஃப்ளூரசென்ஸைக் கரைக்கவும். இந்தத் தேங்கிய நீரில் 20 சென்ட் நாற்றங்கால் பயிரினை நடவுக்கு முன்பு 30 நிமிடம் ஊற வைத்து நடவு செய்யவும்.

**நெற்பயிரில் பூச்சி மேலாண்மை**

1. நாற்றங்காலில் அடி உரமாக வேப்பம் புண்ணாக்கு 12.5 கிலோ 20 சென்ட் நாற்றங்காலுக்கு இடவும்.
2. விளக்குப் பொறிகளை அமைத்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.
3. பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5% த
4. யாரித்து (ஒட்டும் திரவம் 1 லி கரைசலுக்கு 5 மி.லி உடன்) பயிர்களில் தெளிக்கவும்.
5. பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படின் குளோர்பைரிஃபாஸ் 20 EC – 80 மிலி / 20 சென்ட் நாற்றங்காலுக்குத் தெளிக்கவும்.

**நெற்பயிர்**

தர்மபுரி, கரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, அரியலூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நெல்பயிரில் இலைச் சுருட்டுப்புழு மற்றும் தண்டுப்புழு தாக்குதல் பரவலாகக் காணப்படுகின்றன. பூச்சிகளை கட்டுப்படுத்த வயல்களில் விளக்குப் பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும்.

இவற்றைக் கட்டுபடுத்த வேப்பங்கொட்டை சாறு 5 சதக் கரைசலைத் தயாரித்து பயிர்களில் தெளிக்கவும். பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் இரசாயன பூச்சி கொல்லியான கார்டாப் ஹைட்ரோகுளோரைட் 50 % எஸ்.பி 400 கி / ஏக்கர் அல்லது குளோர்பைரிபாஸ் 20 % இ.சி. 500 மில்லி / ஏக்கருக்கு தெளிக்கவும்.

நெல் பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோயின் தாக்குதல் தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பரவலாகத் தென்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் கோசைடு (காப்பர் ஹைடிராக்சைடு) 101 என்ற மருந்தை 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து உபயோகித்து பயிர்களில் தெளிக்கவும்.

**நிலக்கடலை**

சிவகங்கை, திருநெல்வேலி, தர்மபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நிலக்கடலையில் இலைச் சுருட்டுப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. ஆகையால் விவசாயிகள் தங்கள் வயல்களில் விளக்குப் பொறி ஏக்கருக்கு ஒன்று அமைத்து அந்து பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். கோடை மழை தவறும் சமயத்தில் பூச்சிகளின் நடமாட்டம் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தேவைப்படின் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தயாரித்துத் தெளிக்கவும்.

**கரும்பு**

சிவகங்கை, கரூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் கரும்பில் தண்டுதுளைப்பான் தாக்குதல் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணியை வயல்களில் நட்ட 45 நாட்களில் இருந்து 15 நாள் இடைவெளியில் (2 சி.சி / ஏக்கருக்கு) 6 முறை விடவும்.

**பருத்தி**

திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தியில் புள்ளி காய்ப்புழுவின் தாக்குதல் தென்படுகின்றன. ஆகையால் விவசாயிகள் வயல்களில் விளக்குப் பொறி அமைத்து (1 / ஏக்கர்) பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டை சாறு 5 சதம் தயாரித்து பயிர்களில் தெளிக்கவும்.

**பயறு வகைகள்**

மஞ்சள் தேமல் நோயின் தாக்குதல் திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உளுந்து மற்றும் பாசிப்பயிறு செடிகளில் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டும் பொறி (5 / ஏக்கருக்கு) வைத்து நோய் பரப்பும் வெள்ளை ஈக்களை கண்காணிக்கவும். வெள்ளை ஈயின் தாக்குதல் தென்பட்டால் டைமிதோவேட் (அல்லது) மிதைல் டெமட்டான் மருந்தினை 200 மில்லி ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் தெளிக்கவும்.

**பப்பாளி மாவுப் பூச்சி**

மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி பயிரிடும் விவசாயிகள் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கண்காணிக்கவும். இவற்றை ஒட்டுண்ணிகளின் மூலம் கட்டுப்படுத்தவும்.

**தகவல்**


1. இயக்குநர்,
   பயிர் பாதுகாப்பு மையம்,
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
   கோயம்புத்தூர் – 641 003.
   தொலைபேசி எண்: 0422-6611237

2. பேராசிரியர் மற்றும் தலைவர்,
   பூச்சியியல் துறை,
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
   கோயம்புத்தூர் – 641 003.
   தொலைபேசி எண்: 0422-6611214 / 6611414

3. பேராசிரியர் மற்றும் தலைவர்,
   பயிர் நோயியல் துறை,
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
   கோயம்புத்தூர் – 641 003.
   தொலைபேசி எண்: 0422-6611226